செ.வெ.எண்: 263 நாள்: 30.3.2020

**கொரோனா குறித்து வரபெற்ற 60 தொலைபேசி அழைப்புகளுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.**

**கொரோனா குறித்த மனநல ஆலோசனைகளுக்கு 9486067686 அல்லது 9494121297 என்ற அலைபேசி எண்ணில் 24 மணிநேரமும் தொடர்பு கொள்ளலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை டாக்டர்.முத்துலெட்சுமிரெட்டி நினைவு பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் மாவட்ட மனநல திட்டத்தின் சார்பில் கொரோனா தொடர்பாக பொதுமக்களுக்கு தொலைபேசி வழியாக மனநல ஆலோசனை வழங்கி வரும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.3.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒருபகுதியாக வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகைபுரிந்துள்ளவர்கள் பொதுமக்களின் நலன் கருதி தங்களது வீடுகளில் தனிமைப்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு மனஅழுத்தம் தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் வகையில் மாவட்ட மனநலத் திட்டத்தின் சார்பில் 24 மணிநேரமும் செயல்படக் கூடிய அலைபேசி வழி மனநல ஆலோசனை மையம் டாக்டர்.முத்துலெட்சுமிரெட்டி நினைவு பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தினை இன்றையதினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் வெளிநாட்டில் இருந்து வருகைதந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள 4 நபர்கள் இம்மையத்தின் மூலம் மனநல ஆலோசனை பெற்றுள்ளனர். இதேபோன்று 56 நபர்களும் கொரோனா குறித்த தகவல்கள் குறித்தும் தொலைபேசி வழி மனநல ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் 24 மணிநேரமும் கொரோனா சம்மந்தப்பட்ட சந்தேகங்கள் மற்றும் மனஅழுத்தம் தொடர்பாக தயங்காமல் 9486067686 அல்லது 9494121297 என்ற அலைபேசி எண்களின் மூலம் தொடர்பு கொண்டு தேவையான மனநல ஆலோசனைகளை பெறலாம். எனவே பொதுமக்கள் இச்சேவையினை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், ஊரக நலப்பணிகள் இணைஇயக்குநர் மரு.சந்திரசேகரன், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், மாவட்ட மனநலத் திட்ட மருத்துவர் மரு.கார்த்திக்தெய்வநாயகம், கோட்டாட்சியர் தண்டாயுதபாணி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**